வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.2550/ஆ5/2023, நாள். 13.07.2023

.....

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – 2022–2023ம் ஆண்டு மான்யக் கோரிக்கை அறிவிப்பு – தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றத்தை மேம்படுத்தி, ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நிகழ்ச்சி நடத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது – பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/– வீதம் (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி வங்கி கணக்கில் RTGS வாயிலாக தொகையினை அனுப்ப வங்கி கணக்கு விவரங்கள் அனுப்ப கோருதல் – தொடர்பாக |
| பார்வை | 1. 2022–2023ம் ஆண்டு தமிழ் வளர்ச்ச் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பு எண்.01 நாள். 19.04.2022<br>2. அரசாணை (நிலை) எண். 123, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ1–1)த் துறை நாள். 25.08.2022<br>3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.015671/எம்/இ1/2022, நாள்.15.06.2023 |

.....

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 19.04.2022ஆம் நாளன்று நடைபெற்ற 2022–2023ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் (தொழில்துறை) அவர்களின் அறிவிப்பின் படி "அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே தமிழ் மொழியின் தொன்மை, இலக்கண இலக்கியங்கள் மீது பற்றும் ஆர்வமும் ஏற்படுத்திடும் வகையிலும், தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையிலும் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ்மன்றத்தை மேம்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நடத்திட ஆண்டுதோறும் பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/– (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) வீதம் நிதியுதவி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 3–ல் காணும் தமிழ்நாடு பள்ளி கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ்மன்றத்தை மேம்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நிகழ்ச்சி கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு நடத்திடவும், நிகழ்ச்சி நடத்தப்பட்டமைக்கான செலவின விவரங்களையும், பயனீட்டு சான்றிதழையும் இயக்குநருக்கு அனுப்பிட தெரிவிக்கப்பட்டள்ளது.

1. தமழ்க்கூடல் நிகழ்ச்சி நடத்த ஒவ்வொரு பள்ளியிலும் பணியாற்றும் முதுநிலை தமிழாசிரியர் ஒருவரை அப்பள்ளியின் தலைமையாசிரியர் நியமிக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பெறும் 3 தமிழ்க்கூடல் நிகழ்ச்சிகள் தொடர்பாக சார்ந்த பள்ளியின் தலைமையாசிரியரும், முதுநிலை தமிழாசிரியரும் கலந்து ஆலோசித்து முடிவுசெய்து கொள்ளப்பட வேண்டும்.

2. ஒவ்வொரு ஆண்டும் தமிழ்க்கூடல் நிகழ்ச்சி நடத்தப்பட்டமைக்கான செலவின விவரங்களையும், பயனீட்டுச் சான்றிதழையும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிட வேண்டும் ,
3. எக்காரணத்தை கொண்டும் அத்தொகையினை பிற இனங்களுக்கு பயன்படுத்தக் கூடாது.

எனவே அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ்மன்றத்தை மேம்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க்கூடல் நிகழ்ச்சி நடத்திடவும், தொடர் செலவினங்கள் மேற்கொள்ளவும், பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/- (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) அனைத்து அரசு உயர்/மேல்நிலைப் பள்ளியின் வங்கி கணக்கில் RTGS வாயிலாக தொகையினை அனுப்ப ஏதுவாக வங்கி கணக்கு விவரங்கள் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 2 நகல்களில் தலைமையாசியரின் கையொப்பத்துடன் மற்றும் வங்கி புத்தகத்தின் முதல் பக்க நகல் இணைத்து இவ்வலுவலக ஆ5 பிரிவில் 21.07.2023 மாலை 4.00 மணிக்குள் தனிநபர் மூலம் நேரில் ஒப்படைக்குமாறு அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. படிவம்
2. பார்வையில் காணும் அரசாணை

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

18.07.23

பெறுநர்.
தலைமையாசியர்கள்,
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்.

1. சென்னை -6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம். (இப்பொருள் சார்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)

அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ் மன்றங்கள் மேம்படுத்தி தமிழ்க்கூடல் நிகழ்ச்சிகள் நடத்திடல்
(2022-2023 தமிழ் வளர்ச்சி மானிய கோரிக்கை)

படிவம்

| வ. எண் | பள்ளியின் பெயர் | தலைமையாசிரியர் பெயர் | தலைமையாசிரியர் கைபேசி எண் | வங்கியின் பெயர் | வங்கியின் கிளை பெயர் | வங்கி கணக்கு எண் | IFSC CODE | MICR CODE |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

தலைமையாசிரியர் கையொப்பம்